பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 02 2026** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மத்திய பட்ஜெட்டில் இளையோர் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

**2.** சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு மத்திய பட்ஜெட் மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**3.** நாடு எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான அம்சங்கள் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்று காங்கிரஸ் குறை கூறியுள்ளது.

**4.** சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் **1** லட்சத்து **93** ஆயிரத்து **384** கோடி ரூபாயாக உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**5. 19** வயதிற்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற **253** ரன் என்ற இலக்கினை இந்தியா நிர்ணயித்துள்ளது.

-இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

மத்திய பட்ஜெட்டில் இளையோர் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்து அவர் உரையாற்றினார்.

ஏழை மற்றும் நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டுக்கு இந்த பட்ஜெட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் வகையில் வரும் நிதியாண்டிலும் சீர்திருத்தங்கள் தொடரும் என்று அவர் கூறினார்.

உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம், எரிசக்தி பாதுகாப்பு, இறக்குமதி குறைப்பு போன்றவற்றுக்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, 7 சதவீத வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறு-குறு தொழில் துறையின் மேம்பாட்டுக்காக 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நிதியம் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட செமி கண்டக்டர் இயக்கம் செயல்படுத்தப்படும், கண்டெய்னர் உற்பத்திக்கான திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் இதற்காக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

உயிரி மருந்து உற்பத்தியின் முனையமாக இந்தியாவை உருவாக்கும் வகையில் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழகம், ஒடிசா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் அரிய வகை கனிமங்கள் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் வகையில் சிறப்பு வழித்தடங்கள் ஏற்படுத்தப்படும்.

மூன்று வேதியியல் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

தேசிய இழை இயக்கம், கைத்தறி விரிவாக்கம் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் திட்டம் போன்றவற்றை உள்ளடக்கியதாக கொண்டு ஒருங்கிணைந்த ஜவுளித்திட்டம் செயல்படுத்தப்படும்.

காதி மற்றும் கைத்தறி துறையை வலுப்படுத்தும் வகையில் மகாத்மா காந்தி கிராம சுயராஜ் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஜவுளித் துறை விரிவாக்கம் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

கட்டுமான உபகரணங்கள் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 20 புதிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக்கான வழித்தடங்கள் உருவாக்கப்படும்.

நாடுமுழுவதும் ஏழு அதிவேக ரயில் வழித்தடங்கள் உருவாக்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

சென்னையில் இருந்து ஹைதராபாத் மற்றும் பெங்களூருவுக்கான வழித்தடங்களும் இதில் அடங்கும்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்படும்.

நாடுமுழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் விடுதிகள் ஏற்படுத்தப்படும்.

மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி நிதியத்திற்கான ஒதுக்கீடு 40 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும்.

தேசிய விருந்தோம்பல் மையம் ஏற்படுத்தப்படும்.

விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்கான கேலோ இண்டியா இயக்கம் செயல்படுத்தப்படும்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் நோக்கில் வங்கித்துறையில் ஒருங்கிணைந்த சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கென உயர்நிலைக் குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும்.

மூன்று அகில இந்திய ஆயுர்வேத மையங்கள் ஏற்படுத்தப்படும்.

சேவை துறையின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நிலைக்குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

இந்திய படைப்பாற்றல் தொழில்நுட்ப மையம் மும்பையில் ஏற்படுத்தப்படும்

நாடுமுழுவதும் 15 ஆயிரம் பள்ளிகள் மற்றும் 500 கல்லூரிகளில் ஏ.வி.ஜி.சி ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும்.

மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டுக்கு இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மீன்வளத் துறையை வலுப்படுத்தும் நோக்கில் 500 நீர் தேக்கங்கள் மற்றும் நீர்நிலைகள் மேம்படுத்தப்படும்.

மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கில் விற்பனை மையங்கள் ஏற்படுத்தப்படும்.

மருத்துவ சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசுகளின் உதவியுடன் ஐந்து முனையங்கள் ஏற்படுத்தப்படும்.

மாவட்ட மருத்துவமனைகளில் அவசர கால சிகிச்சைப் பிரிவுக்கான கட்டமைப்பு வசதிகள் 50 சதவீதம் மேம்படுத்தப்படும்.

ராஞ்சி மற்றும் Tezpur-ல் செயல்பட்டு வரும் தேசிய மன நல மையம் மண்டல மையங்களாக மேம்படுத்தப்படும்.

தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் உட்பட 15 அகழ்வாராய்ச்சி மையங்கள் மேம்படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த கிழக்கு கடலோர தொழில் வழித்தடம் உருவாக்கப்படும்.

வேளாண் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் வகையில் பாரத் விஸ்தார் அறிமுகப்படுத்தப்படும்.

கால்நடை துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டம் செயல்படுத்தப்படும் போன்ற அறிவிப்புகளையும் அமைச்சர் வெளியிட்டார்.

புதிய வருமான வரிச்சட்டம் வரும் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்று கூறிய அவர், புற்றுநோய் சிகிச்சைக்கான 17 மருந்துகளுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்படும் என்றார்.

7 அரிய வகை நோய் சிகிச்சைக்கான மருந்துகளுக்கும் இது பொருந்தும் என்றும் அவர் கூறினார்.

வாகன விபத்து இழப்பீட்டு தொகைக்கு விதிக்கப்படும் வரி ரத்து செய்யப்படுவதாகவும் அவர் அறிவித்தார்.

சூரிய மின்தகடுகள் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் வேதிப்பொருட்கள் இறக்குமதிக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

தனிநபர் பயன்பாட்டு பொருட்களுக்கான இறக்குமதி வரி 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைக்கப்படும்.

16 ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பதாகவும், மாநிலங்களுக்கான வரி பகிர்வு 41 சதவீதமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக வரும் நிதியாண்டில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நடப்பு நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை நான்கு புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்றும், வரும் நிதியாண்டில் இது நான்கு புள்ளி மூன்று சதவீதமாக குறையும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

நிதியமைச்சரின் பட்ஜெட் உரையை தொடர்ந்து மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் மாநிலங்களவையில் மத்திய பட்ஜெட்டை திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து மாநிலங்களவை நடவடிக்கைகளும் ஒத்திவைக்கப்பட்டன

<<<<<<>>>>>>

சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு மத்திய பட்ஜெட் மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

140 கோடி மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக அவர் அதில் கூறியுள்ளார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான பயணத்தின் அடித்தளமாக இந்த பட்ஜெட் உள்ளது என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் பலரும் பட்ஜெட்டுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்த பட்ஜெட்டில் சிறு-குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் ஊக்கம் அளிக்கும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இந்த பட்ஜெட் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் நாடு எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான அம்சங்கள் இடம்பெறவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டம் 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று தொழில் துறையை சேர்ந்த திரு Jaspreet Singh கூறியுள்ளார்.

சிறு-குறு தொழில் துறையின் வளர்ச்சிக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிதியம் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று தொழில் துறையை சேர்ந்த திரு ரஞ்சித் மேத்தா கூறியுள்ளார்.

இது இந்த துறையின் வளர்ச்சிக்கு பெரும் அளவில் உதவிடும் என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

மூலதன செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று சென்னையை சேர்ந்த பொருளாதார நிபுணர் டாக்டர் கௌரி ராமச்சந்திரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — கௌரி ராமச்சந்திரன் — 44 Sec. )***

<<<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் **1** லட்சத்து **93** ஆயிரத்து **384** கோடி ரூபாயாக உள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில், ஆறு புள்ளி இரண்டு சதவீதம் அதிகமாகும் என்ற நிதியமைச்சகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>

**19** வயதிற்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக **253** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும்

பாகிஸ்தான் சற்றுமுன்வரை **21** ஓவரில் **2** விக்கெட் இழப்பிற்கு **102** ரன் எடுத்துள்ளது.

**Bulawayo** -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா **49** புள்ளி ஐந்து ஓவரில் **252** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக வேதாந்த் திரிவேதி **68** ரன் எடுத்தார்.

---------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **11-9, 11-3, 9-11, 11-5** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Sabrina Sobhy** -ஐ வென்றார்.

**<<<<<<<END>>>>>>**